www.padippakam.com

# ஒரு மெழுகின் யாத்திரை



உருத்திரகுமார்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு மெழுகின் யாத்திரை

உருத்திரகுமார்

இலங்கையில் ஒளிர்ந்தும் தமிழகத்தில் கரைந்தும் போன
உருத்திரகுமார் வாழ்வின் ஒரு சில தடங்களை
பதிவு செய்வதே இந்த கல்வெட்டின் நோக்கு.

படிப்பகம்

www.padippakam.com



எங்கள் குல சாணக்கியனே!

என்றும் எம் நினைவில்...



படிப்பகம்




அமரர்

**தவவிநாயகம் உருத்திரகுமார்**

*விய வருட மாசி மக பௌர்ணமியில்*
*மாண்புடைய உருத்திரகுமார் வள்ளல்*
*தரணி விட்டே சிவபதமடைந்தார் காண்.*

www.padippakam.com



அமரர் திரு. செல்லத்துரை தவவிநாயகம்
அவர்கள் தன் துணைவியாருடன்



படிப்பகம்

www.padippakam.com



அமரர்கள்

திரு. & திருமதி. செல்லத்துரை சொர்ணம்மா தம்பதிகள்



படிப்பகம்

www.padippakam.com

அமரர் உருத்திரக்குமார்
தன் சகோதரர் மற்றும் சகோதரிகளுடன்



# உடன்பிறந்தோரின் உரை

அல்லையூர் அமரஞானி
எங்கள் ஐயா
செல்லத்துரை தவவிநாயகம் - கிருஷ்ணம்மாளுக்கு
ஏழாவது மகவாய்ப் பிறந்த,
எங்கள் அன்புச்செல்வம் த. உருத்திரகுமார் அன்று
தன் சிந்தனையை நிறுத்திக் கொண்டார்.

குணத்தின் குன்று அவன்,
கொள்கைப் பிடிப்பில் இமயம் அவன்;
தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என
தன்னைப் போல பிறரையும் நேசிக்கும்
பண்பாளன் அவன்.

அந்த ஒளிவிளக்கு
இன்று ஓய்வெடுத்துக் கொண்டது.
உறவினராயினும் உற்ற நண்பராயினும்
விருந்தோம்பிச் சிறக்கும் பண்பினன் அவன்.

எந்தக் கணத்திலும் சூழலை மாற்றி
எல்லோரையும் மகிழ்வூட்டி நின்ற
அன்பின் ஊற்று இமை மூடிக்கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

அத்தனையிலும் அத்தனையையும்
ஊடுருவிப் பார்க்கும் நீ
இல்லறத்து ஞானி என்று
எமக்குப் புரியும்.

மூட நம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி இடும் நீ
உன் பகுத்தறிவினால் பரமனை உணரும்
பாங்குடையவன் நீ

காசியிலே கங்கைக் கரையினிலே
மனதும் பஞ்சாகும் மாயத்தைக் கண்டுவிட்டு
வீடெடுத்து இங்கே விற்றிருந்து பார்ப்பதற்கு
ஆசையுற்றான் எனினும்
கூடுவிட்டு இங்கே கூடிக் கரைந்துவிட்டான்

மக்கள் மருமக்கள் அத்தனை பேரையுமே
சமத்துவமாய் அன்பைப் பொழிந்தவன் நீ

இதனை இவன் முடிப்ப என்றாய்ந்து
அதனை அவர்கண் விட்டு
வினை முடிக்கும் திறம் அவன்

எம் ஒவ்வொருவரது சிக்கலுக்கும்
விடிவு தேடும் விடி வெள்ளி நீ

நம் குடும்பத் தோட்டத்தில் மலர்ந்த குறிஞ்சிப் பூ நீ
இளையவனாகிலும் தலைவனாய்
தகுதி கொண்டாய் நீ
இறுதிப் பயணத்திலும் முதலிடம் பெற்ற திருமகன் நீ
நீ இளைவனா? மூத்தவனா?
எண்ணி எண்ணி வியக்கின்றோம் நாம்.



படிப்பகம்

www.padippakam.com

இவனைத் தம்பியாய்,
தமையனாய்ப் பெறவே என் நோன்பிருந்தோம்,
எண்ணி வியக்கின்றோம்.
எத்தனை நண்பரை எமக்கறிமுகம் செய்து
தம்பியர் கூட்டத்தை தரணியில் பெருக வைத்தான்.

எத்தனை அறிஞரை எமக்கறிமுகம் செய்து
எங்களின் சுற்றத்தை ஏற்றமுற வைத்தான்.
எத்தனை நூல்களை எமை வாசிக்கச் செய்து
அறிவின் வட்டத்தில் ஆளுமை செய்யவைத்தான்.

எங்கள் குடும்பத்து அறம் நாட்டும் திருவிளக்கு,
எங்கள் சமுகத்தின் மறம் நாட்டும் குலவிளக்கு,
எங்கள் குல சாணக்கியன்
எங்கள் உயர்வுக்கு வானென நின்ற
கறுப்புச் சூரியன் வினை முடித்துக்கொண்டது.

எங்கள் வாழ்விலும் - எங்கள் வளத்திலும்
மங்காது நின்று ஒளிவீசிய செம்மல்
மாசி மகம் பௌர்ணமியில்
மெழுகாய் கரைந்தான்.



# ஒரு மெழுகின் யாத்திரை

சுழாங்கற்கள் கூடிப் பேசிக் கொள்கிற
சங்கீத நீரோடைகளின் சந்நிதானத்தில்,

கரையோரப் பூக்களின் புதிய வாசத்தில்,
கனவுகளை வளர்க்கும் கவிதை மனதோடு

என் நண்பனின் வாழ்க்கைப் பதிவுகளை
அவனது மறைவுக்குப் பின்னால்,
மறைக்காமல் பதிவு செய்யும் பத்திரம் இது.

உருத்திரகுமார் -
ஒரு மஞ்சள் வெயில் மாலையில்,
எனது நட்பு வட்டத்தில் நாற்றங்காலாக முளைத்தவர்.

அருளாளர் ஜெகத்கஸ்பார்
அறிமுகப்படுத்திய ஆனந்தம்.

பார்த்த மாத்திரத்திலேயே
மரபறிந்து பேசாமல் மனமுவந்து பேசியவர்.
புல்லாங்குழலைப் போல எளிமையாக இருந்தார்.
போர்வாளைப் போல வலிமையாக இருந்தார்.

www.padippakam.com

என் நினைவுகள் நின்று தொழுகின்ற
நிமிடங்கள் அவை;

தனது தந்தை தவவிநாயகம் இருந்தபோது,
"அல்லையூரின் அமரஞானி" என்ற நூலை
எழுதப் பணித்தார்.

ஈரத்தால் இதயம் கனத்துப் போன பதிவு
2001ல் நடந்தது.

2007 ல் உருத்திரனின் பதிவு இடம் பெறுகிறது.

நினைவு முற்றங்களில் நிர்மாணிக்க முடியாத
சில நிலைகுலைவுகளை
உருத்திரனின் மரணம் கொடுத்துவிட்டது.

"ஒரு மெழுகின் யாத்திரை" போல்
உருத்திரனின் வாழ்க்கை அமைந்துவிட்டது.

இலங்கையில் ஒளிர்ந்தும்
தமிழகத்தில் கரைந்தும் போன அவரது
வாழ்வின் ஒரு சில தடங்களை
பதிவு செய்வதே இந்த கல்வெட்டின் நோக்கு.

ஆரவாரமில்லாத அகல்விளக்கைப் போல
வாழ்ந்து மறைந்த உருத்திரனின் வாழ்க்கைப் பாதை
ஒரு சில மறக்க முடியாத உணர்வுகளை
சொல்ல முடியாமல் சொல்லி முடித்திருக்கிறது.

வெந்து வேதனித்துப் போன
மனஉணர்வோடு மயானம் விட்டு திரும்பினேன்.



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு மரணமும் -
மானுடத்தின் மன உள்ளோட்டங்களை
வெற்றி கொண்டே வந்திருக்கிறது என்பதை
வலியுறுத்திக் கொண்டே இருந்தது.

முதுமையின் படித்துறையில் காலம் அவரை
கையகப்படுத்துவதற்கு முன்பாகவே,
மரணம் தன்வசமாக்கிக் கொண்டது
ஈடு செய்ய முடியாது இழப்பாகும்.

நண்பன் மறைந்து விட்டான்
தாங்க முடியாத வேதனை என்றாலும்
தாங்கித்தான் ஆக வேண்டும்
இது காலத்தின் நிர்ப்பந்தம் - இயற்கையின் நியதி
தவவிநாயகம் - கிருஷ்ணாம்பாள்
இவர்கள் தவம் செய்த குடும்பத் தூண்களில் ஒன்று
விழுந்து விட்டது.
அவர்கள் ஏற்றி வைத்த எட்டு தீபங்களில்
ஒரு தீபம் அணைந்து விட்டது.

உருத்திரகுமாரின் நினைவுகள் - என்றும்
பூமரத்து கிளைவிரிப்பில் சிறகடித்து அமருகின்ற
பூங்குயிலின் கீதம் போல் மனவானில்
இசைத்துக் கொண்டே இருக்கும்.

காலமெல்லாம் அன்போடு,

ஜோ மல்லூரி

சென்னை.



படிப்பகம்

# காலமகளின் கண்ணீர்த்துளி

கல்தோன்றா மண்தோன்றா காலத்தே
வாளோடு முன்தோன்றிய மூத்தகுடிகளின்
மூச்சு உலவிய முதுமை நிலம் - தமிழ் நிலம்.

பஃறுளி ஆற்றின் பன்மலை அடுக்கத்தின்
பக்கத்தில் இருக்கும் இலங்கை.

காலமகளின் கண்ணீர்த்துளியாய்-
பூகோள விரிவில் பதிய வைத்திருக்கிற
உரிமைக் கனவாய் -
ஈழம் தனது இதயத்தை
இறுக்கி வைத்திருக்கும் மண்ணில்
பிறந்த சாமண்யன் ஒருவனின்
சரித்திரப்பதிவுகள் இவை.

ஆயிரமாயிரம் கவிதைகளை நாம் படிக்கலாம்.
ஆனால், ஒரு சில கவிதைகள் தான்
நமது மனமஞ்சத்தில் கூடாரம் போட்டு குடியிருக்கும்.

அப்படி ஒரு சில கவிதையைப்போல
உள்ளத்தில் உட்கார்ந்திருப்பவர்தான்
**உருத்திரகுமார்.**

குறுகத் தரித்த குறள் போல் -
சிறுக விரிந்த சிற்றூர்தான் அல்லைப்பிட்டி கிராமம்.

தவவிநாயகம் - கிருஷ்ணாம்பாள் இவர்களின்
அருந்தவப் புதல்வனாய் பிறப்பெடுக்கிறார்.
மூத்த மக்கள் ஆறுபேர்.
உருத்திரகுமார் 7வது ஆண் குழந்தை
தனக்கு பின் ஒரு பெண் குழந்தை.

இந்தக் குடும்பச் சூழலில்தான்
வாழ்க்கையைத் தொடங்குகிறார் உருத்திரகுமார்.

வேலனை மத்திய மகாவித்யாலயத்தில்
கல்வி கற்க தொடங்குகிறார்.

இயற்கையிலேயே கூர்த்த மதி -
அகன்ற அறிவு என்ற இறைவனின் அளவில்லா
கருணை உருத்திரகுமாருக்கு அமைந்தது.

பள்ளிக்கூட நாட்களிலேயே
நல்ல பேச்சாளராக உருவெடுத்தார்.
எந்தப் பேச்சுப் போட்டி ஆனாலும்
உருத்திரனுக்குத்தான் முதல் பரிசு.

இயல்பான இலக்கிய ஆர்வமும் - பேச்சு சாதுர்யமும்
இரண்டறக் கலந்திருந்த போதும், வலிமையான
உடற்கட்டும் உருத்திரனுக்கு அமைந்திருந்தது.
தன்னை ஒரு பேச்சாளனாக மட்டுமல்ல ;
விளையாட்டிலும் நல்ல ஒரு வீரனாக வளர்ந்தார்.
கல்விக்கூட ஓட்டப் பந்தயங்களிலும்,
மாவட்ட ரீதியாக மற்ற விளையாட்டுப் போட்டிகளிலும்
வெற்றி வீரனாகவே வளர்ந்தார்.

தான் படித்த கல்விக்கூடத்தின் புகழுக்கு,
பெரும் பங்கு தன்னிடமிருப்பதாக நம்பி
வெற்றிகளைக் குவித்தார். சுருங்கச் சொன்னால்,
பாடசாலையிலேயே ஒரு கதாநாயகனைப் போல
பெயர் பெற்றார். நல்ல நூல்களைத் தேடித் தேடி
வாசிப்பதில் தேர்ச்சி இருந்தது - பல்வேறு சிந்தனை
மரபுகளிலிருந்து கருத்துக்களை எடுத்து
தன் பேச்சுக்கலைக்கு மெருகேற்றினார்.

12ம் வகுப்பை யாழ் இந்துக்கல்லூரியில் தொடர்ந்தார்.

பட்டிமன்றமாகட்டும், தனிச்சொற்பொழிவாகட்டும்.
எதிலும் முதலிடமாக இருக்க வேண்டுமென்கிற
மன வெறி அவரை வழிநடத்தியது.

பேச்சுக் கலையைப் போலவே, நாடகம் இயற்றி
நடிப்பதிலும் உருத்திரக்குமாருக்கு ஈடு இணை
அந்தக் கல்லூரியில் யாருமில்லை.

அவ்வளவு பெயர்பெற்ற நாடகங்களை எழுதி
உருவாக்கிய பெருமை உருத்திரகுமாருக்கு உண்டு.

பல இரவுகளை தன்
நண்பர்களோடே கழித்திருக்கிறார்.
நாடகம் - பாடல்கள் - பேச்சு - இலக்கியம்
என இளமை இரவுகளையெல்லாம்
பேசிப் பேசியே விடிய வைத்ததுண்டு.

இத்தகைய கலை இலக்கிய ஆர்வம்தான்
உருத்திரனுக்கு பின்னாளில் வாழ்க்கையில்
பல்வேறு சூழல்களில் பெரிதும்
கைகொடுத்து உதவியிருக்கிறது.

www.padippakam.com

அதன்பிறகுதான் - தனது மண்ணில்
இன வாதத்தைக் கொண்ட
இன அழிப்பு போராட்டத்தால்
புலம் பெயர்ந்து தமிழகம் வர நேர்ந்தது.

வரலாற்றுப் போக்கின் உச்சக்கட்டம் -
மக்கள் இலங்கையிலிருந்து புலம் பெயரத்
தொடங்கியதுதான். இருப்பினும்,
புரட்சிகரமான ஆற்றலின் முனைப்போடும்,
நெறியியல் ரீதியான கவனத்தோடும்,
தன் வாழ்க்கைப் பாதையை
புதிய அர்த்தத் தளத்தில் தொடங்க ஆரம்பித்து -
பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில்,
சென்னை வாழ்க்கை சிறகடித்தது.

ஸ்ரீதேவி - சம்பத்குமார் என்கிற
இரண்டு பிள்ளைகளோடும்,
கஜவல்லி என்கிற தனது
அன்புத் துணைவியோடும்
குடும்பத் தலைவனாக
தன் வாழ்க்கையை
உயர்த்திக் கொண்டார்.



கூடிப் பிறந்த உறவுகளானலும் சரி,
கூடிப் பிறக்காத நண்பர்களானலும் சரி,
உருத்திரகுமார் ஒவ்வொருவருக்கும்
சொந்தமான மனிதனாகவே வாழ்ந்தார்.

இரவு பகல் பாராது உழைப்பும் - தன் உடலை
கவனிக்காமல் விட்டுவிட்ட குறையும் தான்
அவரது மரணத்தின் அடித்தளம்.



படிப்பகம்

எந்த சதிக்கும் சஞ்சலப்படாத சத்திரியன் நீ என்பதை அவரது நட்பு வட்டாரம் அறிந்தே வைத்திருந்தது. அவர் பேராண்மையை நினைத்து அவர் நட்பு வட்டாரம் பெருமையடித்துக் கொள்ளும்.



உருத்திரனின்
இலக்கிய ரசனையே ஒரு கவிதைதான்.
ஒவ்வொரு நல்ல கவிதையும்
இந்த மண்ணில்
தோன்றும்போது வானத்தில்
ஒவ்வொரு நட்சத்திரமும் பூப்படைவதாய்
ஒரு கற்பனையை நீ தானே
உன் நண்பர்களுக்கு சொன்னாய்.

ஒரு நல்ல கவிதை வரி
சிக்கினால் போதும்;
அதை திரும்பத் திரும்பச் சொல்லி
புளகாங்கிதம் அடைவார்!

அதே சமயம் எந்தப் பதிவிலும்
ஒரு பழுது இருந்தாலும், தன்
விமர்சனத் கரங்களால் கொட்டி வைப்பார்:

முதுமையில், தலைமுறை
இடைவெளிகளில் தனிமைப்பட்டு விடக்கூடாதென
இலக்கிய மோகம் கொண்ட சிந்தனை தாகம்
உள்ளவர்.

காய் முற்றுகிறபோது கனியாகவேண்டும்!
பயிர் முற்றுகிறபோது உணவாக வேண்டும்!
மனிதன் முற்றுகிற போது முதுமை ஆகக் கூடாது,



படிப்பகம்

www.padippakam.com

மகான் ஆக வேண்டுமென சர்வ சாதாரணமாக தத்துவங்களைத் தந்த சாமாண்யன்.

வாழ்க்கை என்பது
நெளிவு சுழிவு கொண்டதுதான்:
எதிர்வருகிற காற்று - பூந்தென்றலா அல்லது புயலா
என்று அறிந்து கொள்ள எந்தப் பல்கலைகழகத்திலும்
பாடம் படிக்க வேண்டியதில்லை.



இதுதான் -
உணர்வின் பாற்பட்ட நிகழ்வு.

எதிரே நிற்கின்ற எதிரி
வழக்குத் தொடுப்பவனா?
வாள் எடுப்பவனா? என்று
அறிகிற ஆற்றலுக்கு
செயல்பாடுகளே முக்கியம்;
இதுதான் - அறிவின் பாற்பட்ட நிகழ்வு.

இரண்டையும் சரிபாதியாக வாழ்க்கையில்
சுமந்து செல்ல வேண்டுமென ஆசைப்பட்டவர்.

தமிழின் தொன்மையிலும் தூய்மையிலும் பெரிதும்
பெருமிதம் கொண்ட உறுதியோடு இருந்த ஆர்வமும்.
தமது இன மக்களின் கூட்டுறவிலும் கொண்டிருந்தார்.

அதற்கு எடுத்துக் காட்டாகத்தான் -
ஈழப் போராட்டங்களில் கஷ்டப்பட்டு -
நொந்து - தமிழகம் தப்பி வந்த
பலருக்கும் பண உதவி செய்து
பல நாடுகளுக்கும் அனுப்பி
பிழைப்புக்கு வகை செய்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# காற்றைத் தேடிய கற்பூரம்

ஒரு பெண் ஆற்றிலே குளிக்கச் சென்றபோது.
வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகின்றாள்.

இது நிகழ்வு,
இதைப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவரும்
ஒவ்வொரு கருத்தோடு ஒன்றிப் போகிறார்கள்.

"அய்யோ பாவம்" என்பவர்கள் பொது ஜனம்.

"அய்யோ யாராவது காப்பாத்துங்களே" என்பவர்
பக்கத்தில் குளித்துக் கொண்டிருப்பவர்.

"நான் காப்பாற்றுகிறேன்" என்று
வெள்ளத்தில் குதித்து உயிர்விடுபவன் தியாகி.

"அவன் விதி என்ன செய்வது" என்பவன்
ஒரு துறவி

"இந்த நாட்டில் பெண்கள் குளிப்பதற்கு
பாதுகாப்பில்லை" என்கிறவன் எதிர்கட்சிக்காரன்.



படிப்பகம்

வெள்ளத்தில் குதித்து அவளைக் காப்பாற்றி
கரைக்கு கொண்டு வந்து, கைம்மாறு கருதாமல்
கடந்து போகிறவன் "கர்ம யோகி".
எத்தனையோ பேரை கஷ்டத்திலும் நஷ்டத்திலும்
கண் கலங்கி - வாழ்க்கை கசங்கி
வந்தவர்களையெல்லாம் கரையேற்றிய
பெருமைக்குரியவர் உருத்திரகுமார்.

வளரும் தளிர்களுக்கெல்லாம் வாய்க்கால்களை
வெட்டிவிடுகிற வளமான உள்ளமும்,
படரும் கொடிகளுக்கெல்லாம்
பாரியாய் தோள் கொடுக்கிற தோழமை வெள்ளமும்
அமையப் பெற்ற அற்புதமான மனிதர்.
காற்றைத் தேடுகிற கற்பூரமாய் - தானே
தேடித் தேடிப் போய் உதவிசெய்து
தன்னைக் கரைத்துக் கொண்டவர்.

ஏற்றப்பாட்டிலே வருகிற எதுகை மோனையைப்போல்
தனது வாழ்க்கைப் பாட்டிலே இன்ப துன்பத்தை
இலகுவாக ஏற்றுக்கொண்டு, உறவுக்கு உரிய
இடத்தை உறவுக்கும். நட்புக்கு உரிய இடத்தை
நட்புக்கும் தந்து வாழ்ந்தார்.

அக்கா மகள் தயாளினி இறந்த பிறகு
அடைத்து வைக்க முடியாத உன் கண்ணீரை
ஒரு இரவில் இறக்கி வைத்தபோது, தாய்மாமன்
என்கிற நிலையில் அவளது மரணத்தை
தடுக்கமுடியாமல் போய்விட்டதே என்கிற
மகத்தான சோகத்தில் மூழ்கி கலங்கியபோது,
இந்த சமூகத்தில் இளைஞர்களும் - இளம்பெண்களும்
தன்னம்பிக்கையோடு வாழ வேண்டும்.



படிப்பகம்

தற்கொலை என்கிற கோழைத்தனத்திற்கு
துணைபோகக் கூடாது என கொதித்த போது.
மனரீதியான மதிப்பீடுகளை நீ சுட்டிக்காட்டியபோது,
உன் உணர்வும் ஆளுமையும்
சிங்கத்தைப்போல கம்பீரமாக இருந்தது.

பார்ப்பதற்குத்தான் புலியாக இருப்பார்;
பாய்ந்தால் பசுவாகத்தான் இருப்பார்.

யாருக்காவது அறிவுரை சொல்லும் போது கூட,
முன்னேறத் முடியாததற்கான
காரணங்களைத் தேடாதே;
முன்னேற தேவையான எண்ணங்களை நாடு என்பார்.

புகழ் என்பது ஒரு மனிதனுக்கு தகுதியால் மட்டுமே
வரவேண்டிய மகுடம் : அது சிபாரிசுகளோடு
வந்து விடக் கூடாதென தன் "தமிழ் ஒளி"
வாழ்க்கையில் நினைத்தவர்.

இரண்டாயிரம் ஆண்டுகால இலக்கிய பாரம்பரியமிக்க
மொழி தன் தாய்மொழி என்பதை கடைசிவரை
பெருமையாக கருதி வாழ்ந்த உருத்திரன்.
தன் சிந்தனைகளையெல்லாம் அற்புதமான
ஒரு தொகுதியாக்க வேண்டுமென விரும்பியது
நிகழாமலே போய்விட்டது.

தான் படித்ததை - தான் சிந்தித்ததை
தன் நண்பர்களோடு உடனே பரிமாறிக்
கொள்கிற ஆர்வம் அவரிடம் எப்பொழுதுமே
இருந்து வந்திருக்கிறது.

www.padippakam.com



மனதை குள்ளமாக வைத்துக் கொண்ட
மனித சமூகத்திற்கு மத்தியில் -
மனித நேயத்தை வெள்ளமாக
வடிய விட்ட பேராண்மை படைத்தவனின்
அற்புதமான பதிவுகள் இவை.

நிழல் கொடுக்கும் மரம் - வெயிலில் நிற்பது மாதிரி,
பலருக்கு நிழல் கொடுத்த பேராளன் -
வெயிலில் நிற்பதுமாதிரி துன்பத்தில்
நின்று கொண்டு பலருக்கு இன்பம் தந்தார்.

இலைச் சுமைகளை இறக்கி வைத்துவிட்டு
மரங்கள் இளைப்பாறுகிற கோடைக்காலம் போல்
உருத்திரனின் மரணம்
நம் நினைவுகளில் கொதித்துக் கொண்டிருக்கிறது.

உருத்திரன் சொல்லாமல் விட்டுப் போனதெல்லாம்
ஊமைக் கனவுகளாய் உள்மனதை
உறுத்திக் கொண்டே இருக்கிறது.
உருத்திரன் சொல்லிவிட்டுப் போனதெல்லாம்
நனவாக்கும் முயற்சிகளை
மனம் முன்னிருத்திக் கொண்டே இருக்கிறது.
உருத்திரனின் உடலை வேண்டுமானால்
சுடுகாடு ஏற்றுக் கொள்ளலாம்.
உருத்திரனின் மறைவை ஒரு போதும்
இதயம் ஏற்றுக் கொள்ளாது.



படிப்பகம்

www.padippakam.com

*தன் அக்கா கிருபாலினி
மகள் தயாளினி இறந்தபோது,
உருத்திரகுமார் உயிர் கசிந்து உருகிப் போனார்.*

*எந்த இளைஞனும் - இளம் பெண்ணும்
வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க வேண்டுமென்கிற
வைராக்கியத் தோடு வாழ வேண்டும்.*

*எந்த காரணத்தைக் கொண்டும் -
தங்கள் வாழ்க்கையை
தாங்களே முடித்துக் கொள்ளக்கூடாது.*

*வெற்றி - தோல்வி - இன்பம் - துன்பம்
என்பது வாழ்வின் கூறுகள்;
இது குறித்து ஆழமான ஒரு கட்டுரை
வரையச் சொன்னபோது எழுதிய கட்டுரை இது!*

# வெற்றி என்பது பெற்றுக்கொள்வது
# தோல்வி என்பது கற்றுக் கொள்வது

**உன் வெற்றிகளுக்கு நீதான் காரணம்;
உன் தோல்விகளுக்கும் நீதான் காரணம்.**

**கடந்தவை கடந்தவையாகவே இருக்கட்டும்
இதுவரை நீ இழந்தவையெல்லாம் - இனி
நீ பெறப்போவதற்கான முதலீடு.**

**நீ செய்தது உண்மையிலேயே
தியாகமாக இருக்கலாம்;
யாரும் அதை திரும்பிப்
பார்க்காமலே கூட போய்விடலாம்.**



படிப்பகம்

காலம் அத்தனை உணர்வுகளையும்
கண்காணிக்கிறது. ஒவ்வொரு மனிதனின்
வெற்றியையும் - தோல்விகளையும்
காலம் தன் கணக்கில் வரவு வைக்கிறது.

காலத்தின் கணக்கில்
அழியாத பதிவாக நீ ஆகும் வரை
உன் ஒவ்வொரு செயலையும் காலம்
கவனமாக குறிப்பெடுத்துக் கொள்கிறது.

காலம் உனக்கு கொடுப்பதை மணலில் எழுதுகிறது.
காலத்திற்கு நீ கொடுப்பதை கல்வெட்டில் எழுதுகிறது.

மறந்து விடாதே!
உனக்கு திறக்கப்பட வேண்டிய
வாசல் திறந்தேதான் தீரும்.
உன் வாழ்க்கையை காலம் நிர்ணயிக்கும்;
கவலைப்படாதே!

முதலில், இந்தத் தலைமுறை தங்களது
முன்னோர்களின் பின்புலத்தை அறிய வேண்டும்.
தங்களது சமூகச் சூழலை புரிந்து கொள்ள வேண்டும்.
தங்களைச் சுற்றிய வாழ்வியலை
உற்று நோக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தங்களைப்பற்றி
தாங்களே பிழையாக விளங்கிக் கொண்ட
தவறான மதிப்பீடுகளைத்தகர்க்க வேண்டும்.

தன்னம்பிக்கை நிறைந்த
தலைமுறையாக தளிர்க்க வேண்டும்.

www.padippakam.com

மேற்சொன்ன இத்தனை வேண்டுதல்களையும்
இந்த தலை முறைகளிடம் எதிர் பார்ப்பது என்பது
அளவுக்கு மீறிய எதிர்ப்பார்ப்பாகக்கூட இருக்கலாம்.

ஆம்,
ஒரு இக்கட்டான வரலாற்றுத் திருப்பத்தில்
இந்த தலைமுறை மாட்டிக் கொண்டுவிட்டது.

நம் தேசத்தின் மரபுகளை மீறுவதா? அல்லது
மேலை நாடுகளின் கட்டுப்பாடற்ற வாழ்க்கை
முறைகளை அரவணைப்பதா? என்கிற சிந்தனை -
உலகமயமாக்கல் வழியாக
புதிய கதவுகளை திறந்துவிடுகிறபோது,
நவீன யுகத்தின் பரிணாமத்தை
ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயச் சூழலுக்குள்
இந்த தலைமுறை தள்ளப்பட்டிருக்கிறது.

மிகையான சகிப்புத் தன்மையும்,
சார்புத்தன்மையும், தனக்கு என்கிற
சுய நலத்தை உருவாக்கிவிட்டது.
இந்த தலைமுறை கூர்மையாக
உணரப்படவேண்டிய கூற்று இது;
இந்தத் தலைமுறைகளிடம்
இதுவரை கண்டுபிடிக்கப்படாத
ஆற்றல் வளம் நிறையவே இருக்கிறது.

இதை வழிகாட்டவும், வலிமை ஊட்டவுமான
சிறந்த தலைமையோ, கல்வி முறையோ,
பொருளாதார சீர் திருத்தமோ,
தன்னம்பிக்கை உணர்வோ இல்லை என்பது
பகிரங்கமான குற்றச்சாட்டு.



படிப்பகம்

ஒரு லட்சியமிக்க திசையை கைப்பற்ற -
இந்தத் தலைமுறை இன்னும் நெடுந்தூரம்
பயணிக்க வேண்டி இருக்கிறது.

மூலையில் இருந்தது போதும்; முற்றத்திற்கு வா!
வாழ்ந்தாக வேண்டும்; வேறு வழியில்லை.

உழைக்காமல் உண்ணக்கூடாது என்று உறுதி எடு.
இந்த வாழ்க்கையை ஜெயிக்க வேண்டும்.
அகமாற்றத்திற்கான அறிகுறி இதுதான்;
இந்த யுகமாற்றத்திற்கான முகவரி நீதான்.

முன்னேற முடியாததற்கு காரணங்களைத் தேடாதே!
முன்னேறத் தேவையான எண்ணங்களை நாடு.

நீ கம்பீரமான அர்த்தம்;
சத்தியத்தின் அடையாளம்.
எந்த இடத்திலும் உன்னை நீ இழந்துவிடாதே!
இந்த மனிதர்கள் இப்படித்தான்;
நீ கடன் கொடுக்கிறவரை
உன்னை கோபுரத்தில் வைப்பார்கள்.
நீ கடன் பட்டுவிட்டால்
உன்னை குப்பையில் போடுவார்கள்.
கொஞ்சம் உன்னை நீ இழந்தாலும்,
கூச்ச நாச்சமில்லாமல்
உன்னை குத்திக் கிழிப்பார்கள்.
பாதை தவறிவிட்டான்;
பாறையில் மோதிவிட்டான்
என்றெல்லாம் கூட்டம் கூட்டமாக
உட்கார்ந்து பேசுவார்கள்.

எல்லா ஊர்களிலும் இப்படித்தான் பேசுவார்கள்.



படிப்பகம்

நம்முடன் இருக்க வேண்டியது
கடினமான உழைப்பும் - வைராக்கியமும் தான்.

ஒன்றைமட்டும் மனதிலே நிறுத்திவை;
மழை விழுந்தால் மயான மேட்டிலும்
காளான் குடைவிரிக்கும்.
செத்துக் கிடந்தால் யானை காதிலும்
எறும்புகள் படை நடத்தும்.
இது தான் உலகம்.

பல தலைமுறைக்கும் முன்பே
எழுதப்பட்ட பாடலை கொஞ்சம் யோசித்து பார்.
"வாழ்ந்தாலும் பேசும்; தாழ்ந்தாலும் பேசும்".
தோல்வி என்பது தோல்வி அல்ல அது வேள்வி.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஏதாவது
ஒரு விதத்தில் தோல்வி அடைவது இயல்பு.

அவரவருடைய எதிர்பார்ப்பு, ஏக்கம் இவைகளுக்கு
ஏற்ப தோல்வி அடைவது நியதி.

தோல்வியே அடையாத மனிதன்
வெற்றியே அடைந்த மனிதன் உலகில் இல்லை.

எல்லோருக்கும் எப்படி
மூச்சுக் காற்று இருக்கிறதோ அப்படியேதான்
எல்லோருக்கும் வெற்றி தோல்வி பொதுவாக உண்டு.

தொடர்ந்து தோல்விகள் வருகிறதா?
அது வெற்றியைச் சந்திக்கிற இடத்திற்காக வருகிறது.

ஒரு பத்தாம் வகுப்பு தோல்வியோ
அல்லது மேற்படிப்பு தோல்வியோ
வாழக்கையைத் தொலைத்து விடக்கூடியது அல்ல.

ஒரு தோல்வியால்
உன் வாழ்க்கையை நிர்ணயிக்க முடியாது.
அது தற்காலிகத் தடை... அவ்வளவு தான்.
எனவே எந்தத் தோல்வி கண்டும் துவண்டு விடாதே!

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தோல்வியை
ஒரு முறையாவது உணர்ந்து விடுகிறான்.

தோல்வியை உணர்வதே வெற்றியின் தொடக்கம்தான்.
காரணம், தோல்வி என்பது பல தரப்பட்ட
பார்வைகளையும் சிந்தனைகளையும் தந்து விடுகிறது.

குறிப்பாக சரிந்து போன
நிலைக்கான உண்மையைத் தேடவைக்கிறது.

இந்தத் தேடல் தான் அனுபவமாகிறது.
அனுபவங்களின்
கூட்டு சேர்க்கைதான் வாழ்க்கையாகிறது.

வாழ்க்கையில் முன்னேறியவர்களுடைய
பாதையை உற்றுப் பார்த்தால் அவர்களுக்கு
ஏற்பட்ட ஒரு தோல்வியில் இருந்துதான் மகத்தான
திருப்பு முனை ஏற்பட்டு இருக்கும்.

சமூகத்தில் தான் நீ அடர்த்தியான அனுபவ
ஞானத்தை அறிந்தும்,
உணர்ந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.
நீ முத்தம் கேட்டால் எச்சிலா கிடைப்பது?
நீ மலர்கள் கேட்டால் முட்களா கிடைப்பது?
கவலைப்படாதே! பெற்றுக் கொள்.
மலர்கள் வாடி விடும். முட்கள் வாடாது.
வாடும் மலர்களை விட, வாடாத முட்களால்
எவ்வளவோ பயன்பாடு உண்டு.

www.padippakam.com

வாளுக்கு பதில் சொல்லுகிற பலம் கொண்டவர்கள்
வளையல்களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருப்பது
வெம்பி நிற்கிற வேதனையைத் தருகிறது.

சூரிய நெருப்புக்கு ஈடு கொடுக்க வேண்டியவர்கள்
சுருட்டு நெருப்பிலே சூழ்ந்து கிடப்பது
வாடாமல் இருக்கிற வருத்தத்தைத் தருகிறது.

இளைஞர்கள் மீதான குற்றச்சாட்டை
இந்த சமூகம் திரும்பப் பெறுவதோ
தீர்க்கமானதாக இருக்கும்.

இளைஞன் ஓட்டையாகிவிட்டான் என்று
ஒருபோதும் ஏளனம் கொள்ளாதீர்கள்.

இது - மூங்கிலின் முதுகிலே விழுந்த
ஓட்டை குழலாவதற்கான குறியீடு.
அசைவுகளும் - மாற்றங்களும்
அடங்கியது தான் வாழ்க்கை!

உயிர்ப்புத்தன்மையோடும் -
உணர்வுத் தன்மையோடும் வாழ்க்கை இருப்பதற்கு
இவைதான் ஆதாரம் - அஸ்திவாரம் எல்லாம்.

அறிவால் ஏற்படுகிற மாற்றம் -
மூளை சம்பந்தப்பட்டது
உணர்வால் ஏற்படுகிற மாற்றம் -
இதயம் சம்பந்தப்பட்டது.

விஞ்ஞான உணர்ச்சியோடு
ஆய்ந்து நோக்க வேண்டும்.

வாழ்க்கையை நோக்கி ஓடிக் கொண்டேயிரு;



படிப்பகம்

www.padippakam.com

திரும்பிப் பார்க்காதே! ஒரு நொடி திரும்பினால்
உன்னைத் தாண்டி ஒருவன் ஓடிவிடுவான்.
வாழ்க்கையை நோக்கி ஓடிக் கொண்டே,
உழைத்துக் கொண்டிரு;
நீ ஏங்கினாலும் எட்டமுடியாத
மகத்தான வாழ்க்கை உன்னிடம் மாட்டிக் கொள்ளும்.

குட்டி யானையினுடைய
கொட்டாவிக் கெல்லாம் பயந்தால்,
எதிரிலே வருகிற சிங்கத்திற்கு
என்ன பதில் சொல்வது?

உன் பயணம் -
எந்தப் புயலாலும் தடுக்கப்பட முடியாதது.
உன் பயணம் -
எந்தப் பூகம்பத்தாலும் ஒடுக்கப்பட முடியாதது.
காரணம், நீ இளைஞன்.

கடுமையான விமர்சனத்தைக்கூட உள்வாங்கிக்
கொள்ளும் திறன் பெற்ற வர்க்கமாக,
இந்த 21ம் நூற்றாண்டு இளைய தலைமுறைகள்
வாழ வேண்டும் என்கிற ஏக்கம் - எதிர்பார்ப்பு -
எல்லாம் இந்த சமூகத்திற்கு உண்டு.
சமூக சீர்திருத்தத்தின் மீது கொண்ட பிரதான
அக்கறையோடு இதை எதிர்பார்க்கவில்லை.

எந்த ஒரு தனி மனிதனுக்கும் -
அவனது வாழ்க்கை நலமாக அமைய
வேண்டுமென்பதே அடிப்படை ஆசை.



படிப்பகம்

10 வகுப்பில் தேர்ச்சி பெறவில்லையென்பதற்காக
தற்கொலை செய்கிற தன்மைக்கு போவது
படு மட்டமான செயல்.

10வது வகுப்பு தேர்ச்சிதான்
உன் வாழ்க்கையின் இலக்கா?
வெற்றிக்காகவும் தேர்வுகள் இல்லை.
தோல்விக்காகவும் தேர்வுகள் இல்லை.
ஒவ்வொரு தோல்வியும் வெவ்வேறு
பரிணாமங்களை தந்து கொண்டே இருக்கும்.
சில நேரங்களில் சிலவற்றை இழப்பதுதான்
லாபமாக இருக்கும்.

பலருக்கு
எதிர்பாராத திருப்புமுனைகளைத் தருவது -
வெற்றிகளைவிட தோல்விகள் தான் என்பதை
வரலாறு பலமுறை பல்வேறு
சாதனையாளர்கள் வழியாக நிரூபித்திருக்கிறது.

வெற்றியை இழக்கலாம்;
நம்பிக்கையை இழக்கக்கூடாது.

வாழ்க்கையின் அனைத்து சவால்களையும்
ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவம்
இளமையிலேயே இருந்தால் தான்,
வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில்
வளமையானவைகள் வந்து சேரும்.

உனக்குத் தொடர்ச்சியான
தோல்வி வருகிறதா? கவலைப்படாதே!

உன்னைத் தொடர்ந்து
சிலர் புறக்கணிக்கிறார்களா? கவலைப்படாதே!
தொடர்ச்சியான தோல்வியும்,
தொடரும் புறக்கணிப்பும்
உனது மனவலிமையை
உறுதிப்படுத்த அவசியமாகிறது.

காலம்-மரபுகளையே
பல்வேறு வடிவங்களுக்கு மாற்றி விடுகிறபோது,
மனிதர்களை மாற்றாமலா வைக்கும்.
உன்னை ஒதுக்கியவன்
ஒரு நாள் உன்னைத் தேடுவான்,
எதிராளிகள் விருந்தாளிகளாவார்கள்.

சூழ்ச்சிக் கோட்பாடுகள் நிறைந்த சமூகம் தான்
நாம் வாழ்வது?
இருக்கும் போதும் பேசும்? இல்லாத போதும் பேசும்.

எனவே, வாழ்க்கை சார்ந்த ஆழமான அறிவை
கடந்து போன நிமிடம் வரை நடந்தவையெல்லாம்
அனுபவங்கள் தான்; ஒவ்வொரு அனுபவத்திலும்
ஒவ்வொரு வாழ்க்கை உண்டு.

உலகில் எல்லாவற்றிற்கும் பொதுவானது இன்பம்-
துன்பம் என்பது அனைவரும் அறிந்ததே! ஆனால்,
இதில் அறிய வேண்டிய இன்னொரு சிந்தனை
இன்பத்தில் புனிதமும்-துன்பத்தில் அமைதியும்
இருக்கவேண்டும்.

உழுத நிலத்திற்குத்தான் உற்பத்தி அதிகம்.
அழுத மனத்திற்குத்தான் ஆற்றல் அதிகம்.
தூக்கம் பிடிக்காத
துயர இரவுகளின் துயரங்களைத் தாங்கு.

தீப்பிடிப்பதுமாதிரி,
திறமைகளை வளர்த்துப் பிடித்துக்கொள்.
பூப்பூப்பதுமாதிரி,
உழைப்பை உன்னோடு இணைத்துக் கொள்.

பிறகு, வாழ்க்கையே
உன்னோடு வளைகாப்பு நடத்தவரும்.
நல்ல கவிதைக்கு உருவும்-கருவும் வேண்டும்.
நல்ல வாழ்க்கைக்கு உழைப்பும்-திறமையும் வேண்டும்.
நல்லதை வளர்த்துக்கொள்; தீயதை வளர்க்காதே!
தேனீ வளர்க்கலாம்; தேன் வளர்க்கக்கூடாது.
கண்ணுக்குத் தெரிவதை சரியாகப் புரிந்துகொள்;
அதன் பின்னுக்குத் தெரிவதை நீ சரியாக
புரிந்துகொள்வாய்.

**வெற்றி என்பது பெற்றுக் கொள்வது!**
**தோல்வி என்பது கற்றுக் கொள்வது.**

# சத்தியக் கடிதாசி

*உருத்திர குமாரின் பால்ய நண்பன்*
*அன்டனிதாசனின் பதிவு இது.*

செந்தில் இறந்து போய்ச் சரியாக
இரண்டு நாட்கள் கழித்து எனது நீண்ட கால
நண்பனான ராஜேஸ் என்ற உருத்திரகுமார்
நோய்வாய்ப்பட்டுத் தமிழ்நாட்டில் இறந்து போனார்.

உருத்திரன் எனது அல்லைப்பிட்டிக்
கிராமத்தைச் சேர்ந்தவர்.
என்னிலும் விட ஐந்து வயதுகள் மூத்தவர்.

நான் ஆறாவது வகுப்பில்
வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில்
சேர்ந்தபோது உருத்திரன் அங்கே பதினோராவது
வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்.

அங்கே அவர் ஒரு ஹீரோவாகக்
கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தார்.
பாடசாலைக் காலத்தில் அவர் இயக்கி நடித்த
நாடகங்கள் புகழ்பெற்றவை.
அந்தப் பதின்ம வயதுகளிலேயே
அவர் அனல் பறந்த பேச்சாளராகத் திகழ்ந்தார்.

www.padippakam.com

அப்போது
அவர் கம்பன் கழகப் பேச்சாளர்களில் ஒருவர்.
உருத்திரன் மாவட்ட அளவில்
முதன்மையான ஓட்டப் பந்தய வீரர்.

அக்காலத்தில் 100 மீற்றர், 200 மீற்றர்,
800 மீற்றர் ஓட்டங்களில் அவரையடிக்கத்
தீவுப்பகுதியில் ஆளே கிடையாது.

பாடசாலையின் உதைபந்தாட்ட அணியிலும்
அவரே முக்கியமான வீரராக இருந்தார்.

இயற்கையிலேயே
வாட்ட சாட்டமான உருத்திரன் தனது
உடற்பயிற்சிகளால் ஒரு மல்புத்த வீரனைப்போன்ற
தோற்றமும் வாய்க்கப் பெற்றிருந்தார்.

உருத்திரனுக்கு நான் எப்போதும்
ஒரு செல்லப்பிள்ளையாகவே இருந்தேன்.
அவர் என்னைத் தனது சைக்கிளில் ஏற்றிக்கொண்டு
யாழ்ப்பாணம் முழுவதும் தான் பேசும்
பட்டி மன்றங்களுக்கும் கூட்டங்களுக்கும்
அழைத்துச் செல்வார்.

அவர் பங்கு பெறும் ஓட்டப்பந்தயங்களில்
அவரது உதவியாளன் நானே.
அவரின் மாற்றுடைகளை வைத்திருப்பது,
குளுகோஸ் கொடுப்பதிலிருந்து அவர் வென்றெடுக்கும்
கோப்பையைச் சுமந்து வருவது வரைக்கும்
எனக்கு உவப்பான விடயங்கள். ஆனால் உருத்திரன்
தோற்கும் நிலை ஏற்பட்டால் பட்டி மன்றத்தையோ
விளையாட்டுப் போட்டியையோ ஏதாவது ஒரு வழியில்



படிப்பகம்

அவர் குழப்பியே தீருவார்.
அவரிடம் அவரின் திறமைகளுக்கு
நிகராகத் திமிருமிருந்தது.

அவர் யாழ் இந்துக் கல்லூரியில்
பன்னிரெண்டாம் வகுப்பில் சேர்ந்த பின்னும்கூட
எனதும் உருத்திரனதும் நட்புத் தொடந்து
கொண்டேயிருந்தது. நானும் உருத்திரனும்
கட்டை ராசுவும் இரவிரவாகக் கிராமத்தின்
மணற் திட்டுகளில் உட்கார்ந்து
பேசிக்கொண்டேயிருப்போம்.

பாடல்கள், நாடகம், திரைப்படம்,
பெட்டைகள் என அலைந்து கொண்டிருந்த
எங்களின் பேச்சு யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து
ஒரு தீர்க்கமான திசையில் செல்லலாயிற்று.

எங்களின் அத்தனை பால நட்பையும் மீறி,
இப்போது ஒருவர்மீது மற்றவருக்கு
எப்போதுமே சந்தேகமும் எச்சரிக்கையுணர்வும்
இருப்பதை நாங்கள் இருவருமே
உணர்ந்துகொண்டோம்.

ஆனால் சில சந்தர்ப்பங்களில்
இந்த மனத் தடைகள் எம்மிருவரையும்
அறியாமலேயே நெகிழ்ந்துபோயின.
அத்தருணங்களில் நாங்கள்
ஒரே மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தோம்.
ஒன்றாகச் சூழ் கொழுத்தி மீன்பிடிக்கச் சென்றோம்.

நீண்ட பல வருடங்களிற்குப் பின்பு 1999 ல் மீண்டும்
நான் உருத்திரனை சென்னையில் சந்தித்தேன்.

அதற்குப் பின்பும் சில தடவைகள்
நான் சென்னை சென்றிருந்தபோதும்
உருத்திரனைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம்
ஏனோ அமையவில்லை.

இந்த வருடம் ஜனவரியில்
நான் சென்னைக்குச் சென்றிருந்தபோது
ஒரு நண்பரின் தாயாரின் இறுதிச் சடங்குகளிற்காகப்
பெசன்ட் நகர் மயானத்திற்குச் சென்றிருந்தேன்.
இறந்துபோன பெண்மணி
உருத்திரனின் நெருங்கிய உறவினர்.
மயானத்தில் வந்து நின்ற ஒரு வாகனத்திலிருந்து
இறங்கிய ஒரு வாட்டசாட்டமான இளைஞன்
வாகனத்திலிருந்து ஒரு குழந்தையைத்
தூக்குவதுபோல உருத்திரனைக் கைகளில்
வாரியெடுத்துச் சக்கரநாற்காலியில் அமரவைத்தான்.

அந்த மல்லாமலை உருத்திரன்
ஒரு அடிபட்ட கிழட்டுப் பறவையைப் போல
சக்கரநாற்காலியில் துவண்டு கிடந்தார்.
எட்டு வருடங்களிற்குப் பின்பு
என்னைக் கண்டபோதும் முதற் பார்வையிலேயே
அவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார்.

அந்தப் புகழ்பெற்ற ஓட்டப் பந்தய வீரனின்
கால்களும் கைகளும் சூம்பிப்போய்க் கிடந்தன.
அவரின் இரு கண்களும்
முற்றாக மஞ்சள் படர்ந்துபோய்ப்
பூனையின் கண்களைப்போல கிடந்தன.
அவரின் நாவு தடுமாறிக் கொண்டிருந்தது.

அவர் அங்கு கொண்டுவரப்பட்டதிலிருந்து திரும்பவும் தூக்கிக் செல்லப்படும்வரை அவர் என்னுடன் பேசிக் கொண்டேயிருந்தார்.

நான் அவரது சக்கரநாற்காலியைப்
பற்றியவாறே நின்றிருந்தேன்.
அவர் துண்டு துண்டாகப்
பழைய கதைகளைப் பேசிக்கொண்டேயிருந்தார்.
நானும் பேசவேண்டும் என்று
அவர் எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை.
ஒன்றையும் மிச்சம் வைக்காமல்
பேசித் தீர்த்துவிட வேண்டும்
என்ற அவாவில் அவர் பேசுவதாகத் தோன்றியது.

அவர் பேசப்பேச
நான் "ம்" கொட்டியவாறே நின்றிருந்தேன்.
அப்போது என் மனம் உருத்திரன் விரைவிலேயே
இறந்துவிடுவார் என்று சொல்லியவாறேயிருந்தது.
ஏனெனில் தோற்கும்போது விளையாட்டைக்
குழப்புவது உருத்திரனின் இயல்பு.

●

www.padippakam.com

# அல்லையூர் தந்த அருந்தமிழ் செல்வமே!



ஊர் நலம் - சீர் வளம்
ஓர் குலம் - ஓர் மனம் என
வாழும் போதே வரலாறான
தவவிநாயகம் தந்த தவமே!
உருத்திர குமாரனே!

அல்லையூர் தந்த
அருந்தமிழ் செல்வமே!



படிப்பகம்



ஈரநிலா இறங்கிவரும்
இதமான காலத்தில்,
தாய் பாடிய தாலாட்டில்
மொழியை சுவாசித்த
மோனமே!

துணிவார்ந்த மேடையாற்றலிலும்
அறிவார்ந்த கதையாற்றலிலும்,
செறிவார்ந்த நாடக தீட்டலிலும்,

கல்விக் காலங்களை
செதுக்கிக் கொண்ட உருத்திரா!

உன்னைக் காணாமல்
மனம் வெதும்புதய்யா!



தென்னை போல் உயர்ந்த மனமும்
அன்னை போல் உயர்ந்த குணமும்
கொண்டவனே!

மரணத்தின் வலைவீச்சில்
மாய்ந்து விட்டதோ
உன் பெருமூச்சு!



குடும்ப உறவுகளில்
சுவை மிஞ்சும்
கனியாக
இனித்தவன் நீ!

நட்பு உள்ளங்களில்
பனி சிந்தும் மலராக
சிலிர்த்தவன் நீ!

நிழல் கொடுக்கும் மரம்
வெயிலில் நிற்பது போல்
பலருடைய வாழ்க்கைக்கு
நிழல் தர
வெயிலில் நின்றவன் நீ!



காலம் தாழ்த்திய
உடல் நல அக்கறையால்,
மரணத்திடமிருந்து
உன்னைப் பிரித்தெடுக்க
முடியாமல் போய்விட்டது.

எத்தகைய சோகத்திலும்
ஒரு கம்பீரமான
அர்த்தமாகவே இருப்பாய்;

***உன்னைப் பார்க்காமல்,***
***உள்ளம் கொதிக்குதையா!***

ஆயிரம் சூழல்கள்
அடர்ந்து வந்தாலும்,
ஆயிரம் தடைகள்
அழித்திட நினைத்தாலும்,
மனவுறுதி குலையாத
கம்பீரம் கொண்டவனே!



மரணமா
உன்னை வென்றது?
நம்ப முடியவில்லையே!

பிறருக்கென்று
இன்னல்கள் வந்தால்
இதயத்தைக் காட்டுவதும்,
தன்னலம் இல்லாமல்
தருமத்தை நாட்டுவதும்

உன்னுடைய
அகப்புற
அடையாளமல்லவா!



சுமைதாங்கி போல
எத்தனை
பேருடைய
வாழ்க்கையைத்
தாங்கினாய்!

கரையேற முடியாத
கடலலைகளைப் போல
மரணத்தின் பிடியிலிருந்து
மறுபிறப்பு பெறமுடியாமல்
போனாயே!

www.padippakam.com



முதுமை என்றால் கூட
நெஞ்சம் கொஞ்சம் தாங்கும்.

இளமை என்பதால்
எங்கள் இதயம் தாங்கவில்லை.

புழுதியில் விழுந்த புதுமழைபோல்
மரணத்தின் மடியில் விழுந்த
மாணிக்கமே!

நீ பிரிந்த துயரத்தால்
எங்கள் உயிரில் வழிகிறது
சோகம்.



படிப்பகம்



இலைச் சுமைகளை
இறக்கிவைத்து
இளைப்பாறுகிற
கோடை காலம் போல்,

உன் உயிர்ச்சுமையை
இறக்கி வைக்க
எங்கே போய்விட்டாய்.

ஓய்வெடுத்துக்
கொண்ட பறவையே!
விடுமுறைக்குச் சென்ற நதியே!
மறைந்து போன நட்சத்திரமே!

இனி
இந்தப் பூமியின் மேல்
நீ உலா வரப்போவதில்லை
இனி எங்கள் பயணங்களில்
நீ கூட வரப்போவதில்லை.
இனி எங்கள் வாழ்க்கையில்
நீ பங்கெடுக்கப் போவதில்லை.



www.padippakam.com



இனிமேல்

எங்கள் நினைவுப்

பேரேடுகளில்

நீங்காமல்

நிலைபெற்றுவிட்டாய்.

எங்கள் மன வானத்தில்

மங்காத நிலவாக

மையம் கொண்டுவிட்டாய்.





படிப்பகம்

www.padippakam.com

# கண்ணீர் அஞ்சலி



## த. உருத்திரகுமார்

அன்பு நண்பா நீ எம்முடன் பழகிய
அந்த நாட்களை எண்ணித் தவிக்கின்றோம்.
இன்று எம்மைவிட்டு நீ சென்றிருக்கலாம் ஆனால்,
உன் நினைவுகள் என்றென்றும் எமைவிட்டு அகலாது.
நண்பனே..... உனது ஆத்மா
சாந்தியடைய எமது பிரார்த்தனைகள்.

தொடர்புகளுக்கு
இலண்டன் 0788 405 6869
இந்தியா 0091 44 22 42 32 02
0091 44 9444195623

தகவல்-நண்பர்கள் (லண்டன்)

றொபேட் S. ஈசன்
P. ஆனந்தராசா S. ஆருள்
S. தேவா S. புவி
S. தவம்
M. விஸ்னு



படிப்பகம்

www.padippakam.com

# எங்கள் உருத்திரகுமாரன் மறைந்தான்



நித்தியமில்லை சீவிதம் -
சத்தியம் ஆயினும் -
ஒப்பவில்லை எம்மனம் - தோழா
சாகட்டும் அந்த மரணம்!

உருத்திரகுமாரா.....
கடல்களைக் கடந்தாய்
வான்வழி பறந்தாய்
எம்முடன் கரம்கோர்த்து
நிலமெங்கும் நடந்தாய்.....
இப்போது எங்கே நீ
வெகுதூரம் பறந்தாய்!

சிரிப்பும் சிருங்காரமுமாய்
செழித்த உன் வாழ்வில்
நிறுத்தப்புள்ளி இட்டது
இயற்கையின் கொடுமைதான்!

கருமையில் அழகு -
கம்பீரத்தில் மென்மை -
அலட்சியத்திலும் அன்பு -
பாய்ச்சலிலும் ஒரு நிதானம் -
எதிர்மறைக் கலவையாய்
எமை வியப்புறச் செய்தவனே!

காலனை வெல்ல ஏலாது
எனினும் -
காலத்தை வென்றிருப்போம்
உன் ஞாபகங்களை சுவாசித்து!

செல் எம்தோழா -
முதுமையெனும் துயரை
முதுகினிலே சுமக்காமல்
போதும் என்றெண்ணி
புறப்பட்டுப் போனதாக
ஆறுதல் கொள்கிறோம்
எமைத்தேற்றிச் செல்கின்றோம்!

- *நண்பர்கள்*



படிப்பகம்

www.padippakam.com

# கண்ணீர் அஞ்சலி



## தவவிநாயகம் உருத்திரகுமார்

(அல்லைப்பிட்டி – யாழ்ப்பாணம்)

*எம் இனிய நண்பனே!*
*உன்னுடன் இருந்த நாட்கள்*
*எல்லாம் எங்களின் இனிய நாட்கள்.*
*பலபல நாடுகள் பறந்து திரிந்தாலும் உன்னுடன்*
*பழகிய நாட்கள் எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காது.*
*எங்களை ஆளாத்துயரில் தவிக்கவிட்டு நெடும்*
*பயணம் சென்றாயோ. இனி என்றுகாண்போம்,*
*உன் இனிய பேச்சை இனி என்று கேட்போம்,*
*உன்பிரிவால் ஆளாத்துயரில் ஆழ்ந்து தவிக்கும்*
*நன்றியுள்ள நண்பர்களின் இதய அஞ்சலி!*

**நண்பர்கள் (வேலணை செட்டிபுலம் – லண்டன்)**



படிப்பகம்

www.padippakam.com

# அண்ணா நீ... வருவாயா?



அண்ணா
உன் இதயமா
இயங்காமற் போனது?
முதுகுவலியா - உன்
மூச்சுவழியை நிறுத்தியது
நம்ப முடியவில்லையே அண்ணா
இனி யார் வீட்டு வாசலில் நிற்போம்
இதோ உனது இறுதி யாத்திரையில்
எறும்புகளும் முல்லை அரும்புகளும்
பூக்களைச் சுமந்தாலும்
கண்ணீர்ப் பூக்களில் அஞ்சலிக்கின்ற
அணி வகுப்பில்
நாமும் நிற்கின்றோம்
எழுதி எழுதி ஆற்றும்
எங்கள் வார்த்தைகளில்
இரத்தமே மையாகின்றது
ஆண்டவன் வழங்கிய
அட்சய பாத்திரமே!
முழக்கொண்டு விட்டாயே!
இனி அள்ளி வழங்க யார் வருவார்?
இனிய அன்பை யார் பொழிவார்?
அடுத்த பிறவியிலாவது
அண்ணா நீ வருவாயா?

**- ஏங்கும் உன் தம்பியர்**



படிப்பகம்

www.padippakam.com

# புகழுடம்பில் வாழுகிறாய்



இவ்வுலகு வெறுத்துவிட்டதென்றா
இறைவனிடம் சென்றுவிட்டாய்?

தனக்குப் பெருமை சேர்ப்பதற்கோ
சொர்க்கம் உன்னை அணைத்துக் கொண்டது

மை ஊற்றி எழுதி வந்த எம்மை
கண்ணீர் ஊற்றி எழுத வைத்துவிட்டாயே !

இளமைதானே உன் பேச்சும், மூச்சும்
முதுமையின் முடிவை ஏனண்ணா எடுத்தாய்?

மனதார வெறுப்பவர் யாரும் இலர் உன்னை
பின் ஏன் மறந்தெம்மைவிட்டு விண்ணுலகம் சென்றாய்?

நல்லோர் உலகில் நெடுங்காலம் வாழ்வதில்லை
என்றெமக்கு உணர்த்தவோ எமைப் பிரிந்து சென்றாய்?

மெய்யுடம்பு தானண்ணா மேதினியில் மறைந்தது - உன்
புகழுடம்பு எம் நெஞ்சில் நீங்காது வாழுது !

- அன்புத்தம்பிமார்



படிப்பகம்

www.padippakam.com

# இதயம் கசியும் இறுதி அஞ்சலி

நண்பனாய், தந்தையாய், தலைவனாய்
எல்லோருக்கும் உற்ற தோழனாய் வாழ்ந்து வந்த

திரு. T. உருத்திரகுமார் அவர்களுக்கு
எங்கள் இதயம் கசியும் கண்ணீர் அஞ்சலி



உள்ள கரத்தில் உலா வந்த எங்கள்
உள்ளம் கவர்ந்த உத்தமரே நீங்கள்
உலகத்தை விட்டு சென்றாலும் எங்கள்
உள்ளத்தை விட்டு செல்லவில்லை

கருணையே மறையுமென்றால்
காலமே உண்மைதானோ?
பொறுமையே அழியுமென்றால்
பூமியும் தான் தாங்கிடுமோ?

பாரி வள்ளல் போல் வருவதை வாரி வாரி
வழங்கிடும் வள்ளல் நீ உந்தன் மேனி
எரியும் நெருப்பில் வீழ்ந்திடலாமோ?
தர்மமே இது நியாயம் தானா?

நீங்கள் மண்ணுலகம் விட்டு
விண்ணுலகம் சென்றாலும் என்றும்
மங்காது இங்கு உந்தன் புகழ்

என்றும் உங்கள் நினைவுகளில்
இதயம் கசிந்து ஏங்கி உருகும் தம்பி !

- J. தினா (G.M) குடும்பம்



படிப்பகம்

# கண்ணீர் அஞ்சலி



சொத்தாக இருந்தாய் - எங்கள்
சுடராக இருந்தாய் - இல்ல
முத்தாக இருந்தாய் - அன்பு
முகத்தோடு இருந்தாய் - பாசக்
கொத்தாகி யிருந்தாய் - தேசக்
கொழுந்தாகி யிருந்தாய் - எங்கள்
பித்தாக இருந்த செம்மல்
பிரிவைஏன் கண்டாய் ஐயா !
மாமாவின் மகனே, சொந்த
மச்சாளை மணந்த வனே!
தூமாட விளக்கே! தெய்வம்
துலங்கிடும் இல்ல வேந்தே
நாமாட வைத்து நாயேன்
நகர்ந்தனை சொல்லு ஐயா !
ஏமாற எம்மை வைத்த
இறைவனும் கொடியர் தானோ !
எம்முயிர்ச் சித்தப் பாவே
இந்தியா தன்னில் உந்தன்
செம்முயிர் பிரிந்த தென்று
சொல்லினர் என்செய் குவோம்
கும்பிடும் இறைவன் இந்தக்
கொடுமையை ஏன்செய் தானோ?
அம்புயச் சித்தப் பாவே
அஞ்சலி நெஞ்சில் வைத்தோம் !
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் மைத்துனி — தா. தேவன்
உங்கள் சோதரன் — திருமதி. தேவன்
உங்கள் பெறா மக்கள் — பெறா மக்கள்..
கனடா

# நட்பின் இலக்கணமே!

பொது வாழ்வில் புகுவதற்கே
பாடசாலை நீங்கி வந்தான்

கடல் கடந்து வித்தை கற்று
தாய் நிலத்தை மீட்க வந்தான்

வெளியில் ஒரு போராட்டம்
உள்ளும் ஒரு போராட்டம்

அலை தள்ளிய சருகைப்போல்
அல்லைப்பிட்டி மீண்டும் வந்தான்

இனியாவது படிப்போமென்று
யாழ் பல்கலைக்கழகத்தில்.

இடம் எடுத்தான், ஆனாலும்
சூழல் இடம் கொடுக்கவில்லை

'விட்டதுடன் தொடர்பா' என்று
விளக்கம் கேட்டு மறியலில் வைத்தனர்

உருத்திரனை மீட்பதற்கு
ஓசைப்படாமல் ஒரு போராட்டம்
மீண்டுவந்த அவனுடன்

கொழும்பு நோக்கி ஓர் பயணம்
அங்கும் இருக்க விடவில்லை

அரசு ஒரு புறமும் அமைப்பு மறுபுறமும்
அலைக்கழிக்கப்பட்டோம்

இந்திய மண்ணில் மீண்டும்
இதயம் கனத்த தனிமனிதனாய் இறங்கி நின்றான்

வழிகாட்டும் ஒளி விளக்காய்
வாழ்வைத் தொடங்கினான்
அவன் பார்த்துக் கொள்வான் -
என்று வந்தோர்க் கெல்லாம்
விருந்தோம்பி அனுப்பிவைப்பான்
ஆலமர நிழலாய் அவன்,
இளைப்பாறி உதவிபெற்றோர் பலர்
வலதுகரம் கொடுப்பதை
இடதுகரம் அறியாது என்பதை
இவனது அகராதியில்தான் கண்டேன்
முகம் அறியா அகதிகளுக்கும்
முகவரியை அளித்தவன் நீ
உணவுக்கு, உடைக்கு படிப்புக்கு என்று
அள்ளிக் கொடுத்ததை
உடனிருந்த நானறிவேன்
குடும்பத்தில் நானுமோர்
அங்கமாக இடம் கொடுத்தான்
அருகிருந்து சொன்னால்
அன்பாய்க் கேட்பான்

அருகில் இல்லாத நேரம்
உன்னைப் பறிகொடுத்துவிட்டேன்
மீட்க முடியாத இடத்திற்கு
மீளாத்துயில் கொண்டுவிட்டாய்

காலமும் சூழலும் நண்பா
கடைசியாய் ஒரு தடவை
காணமுடியாது செய்ததே
உன் திருமுகத்தை

நீர், நிலம், நெருப்பு, வளி, வெளி என
நீ நிறைந்து விட்டாய்.
நடபின் இலக்கணமாய் -
நடைபோட்டு உயர்கின்றாய்..

- சத்தியன்

www.padippakam.com



# வித்தகப் புதல்வன் மண்ணில் வீழ்ந்தனாம்; ஐயோ!

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

சத்தியம், தருமம், அன்பு சார்ந்தவர்க்கு உதவும் பண்பு,
நித்தமும் உறவையெல்லாம் நெஞ்சினில் தாங்கி முன்பு
பத்துடன் ஓடிஓடிப் பாருக்காய் வாழ்ந்த நல்ல
வித்தகப் புதல்வன் மண்ணில் வீழ்ந்தனாம், விம்முற்றேன் நான்.

உருத்தியை இழந்துபோனேன் உயிரினில் ஒன்றி நின்ற
சத்தியப்பிள்ளை தன்னை சடுதியில் இழந்துபோனேன்.
பத்தியாய் என்னைத் தன்னின் குருவெனப் பகர்ந்து அன்பை
நித்தமும் பொழிந்த எந்தன் நேசனை இழந்துபோனேன்.

தனியனாய் நின்ற என்னை தன்னுடை அன்பினாலே
கனிவுறச்செய்து நெஞ்சிற் காந்தமாய் ஒட்டிக்கொண்ட
இனியவன் இனிமைபொங்கும் இன்சொலை எங்குகேட்பேன்?
பனித்திடக் கண்கள் பொங்கிப் பதறினேன் பாவிபோனான்.

அன்பினால் ஐய! உன்னை அடித்திடும்போதுங் கூட
பண்பினாற் கைகள் கட்டிப் பாசமாய் ஏற்று நிற்பாய்!
முன்பல பிறவிதன்னில் முதிர்ந்த நற்பாசமென்று
எண்ணி நான் ஏங்கிநிற்பேன், இனிமையைத் தாங்கிநிற்பேன்.



படிப்பகம்

மலையென நிமிர்ந்த உந்தன் மறுவிலா வடிவங்கண்டு
நிலைதடு மாறும்நாளில் நெஞ்சினில்த் தாங்க இந்த
தலைமகன் இருப்பானென்று தருக்கொடு வாழ்ந்தேன் இந்த
நிலையிலா வாழ்வு உன்னை நீக்கிட நெஞ்சம் மாண்டேன்.

வானென உயர்ந்துநின்ற வடிவெலாம் சுருங்கி உன்னை
காணநான் செய்தபாவம் கடவுளே! எங்கு செய்தேன்?
தேனெனப் பேசும் வார்த்தை திணறிடக் கண்கள் கெஞ்ச
வீணெனக் கிடந்தபோதும் விழியினால் அன்பு செய்தாய்.

என்னுடைத் தெய்வம் வந்ததிங்கென இயம்பி அன்று
கண்ணிலே உயிரைக்காட்டிக் கையினாற்தொழுதாய், உன்னை
மண்ணிலே வாழச்செய்யும் மார்க்கத்தைக் காட்டிடாமல்
புண்ணிலே வேல்பாய்ந்தாற்போல் புழுங்கினேன், புலம்புகின்றேன்.

தாயவள் என்ன செய்வாள்? தரணியில் உன்னைக் கொண்ட
தூயவள் என்ன செய்வாள்? துளிர்த்த உன்உயிரில் உற்ற
சேயவள் என்ன செய்வாள்? திகைத்து உன் குடும்பத்தார்கள்
ஓய்வது இல்லாதென்றும் உழல்வரே எங்கு போனாய்?

தாயென உன்னை என்றும் தாங்கிய தமக்கை தானும்
சேயினை இழந்த துன்பம் தீருமுன் நீயும் போனாய்
மாயும் அந்நெஞ்சுக்கிந்த மண்ணினில் இனியார் தெம்பு
தூயவா சொல்வார்? அவளைத் துயரினில் வாடவிட்டாய்!

என்னுயிர் பிரியும் மட்டும் இனியனே உந்தன் எண்ணம்
கண்ணிலே நின்று நெஞ்சக்கடலிலே கலந்து நிற்கும்
புண்ணியா போய்வா! உந்தன் புனிதநல் நெஞ்சம் போல
எண்ணியதெல்லாம் உந்தன் எச்சங்கள் எய்தி வாழும்.

www.padippakam.com

# நான் நம்ப மாட்டேன்!



அண்ணனுக்கு அண்ணனாய் அன்பு காட்டினாய்!
நண்பனுக்கு நண்பனாய் தோள் கொடுத்தாய்!
தலைவனாய் நின்று வழி காட்டினாய்!
வள்ளலாய் எம் எல்லோர்க்கும் வாரி வழங்கினாய்!
நான் பெரிதாய் உனக்கெதுவும் செய்யவில்லையே!
எனக்கேன் நீ அவ்வளவு உதவினாய்?
அதனால் உன் முன் நான் கூனிக்
குறுகியல்லவா நின்றேன்!
வாழ்வினைத் தொலைத்து நான் நின்றபோது
நீயிட்ட சோறு
என் தாயையும், சோதரனையும் எனையும் காத்து
நின்றதடா சாமி!
நான் தறி கெட்டு நின்ற போது எனைத் தாய் நாடு
அனுப்பி வைத்து என் வாழ்வில் ஒளியேற்றி
வைத்தாயடா நண்பா!
கையிலே கடவுச் சீட்டும் தந்து அத்துடன் ரிக்கட்டும்
டொலரும் தந்து, நீ என்னையும் என் தாயையும்
அனுப்பி வைத்தது
என் கண்ணை விட்டு மறையு முன்பே



படிப்பகம்

நீ படுக்கையில் போனதேனோ என் தலைவா?
ஒன்பது வருடங்களாக நான் காத்திருந்தேன்
என் வாழ்க்கையின் ஒவ்வொரு உயர்வையும்
உன்னுடன் பகிர்ந்துகொள்ளப் பார்த்திருந்தேன்.
இந்த வருடம் அடுத்த வருடம் என...

என் சாதனைகளை எல்லாம் கூறக்கூற
நீ உன் மனம் குளிர்ந்து புன்னகையால்
எனை வாழ்த்தி நிற்பாய் எனக் கனவு கண்டேன்.
நீ முதுகில் தட்டினால் உலகையே என் வசப்படுத்தும்
வீரம் எனக்குள் பலமுறை வந்ததைய்யா!
நீ இன்று இல்லை என்பதை
நான் நம்புவேன் என நினைத்தாயோ?
பச்சை மரமாய் நின்று
பலருக்கு வாழ்க்கையில் ஒளியாய் நின்ற நீ
மரணித்துவிட்டாய் என்று எனக்குச் சொன்ன
உன் சொந்தக்காரனை நான் வெறுக்கிறேன்.
பார்க்க மறுக்கின்றேன்.
நீ இறந்துவிட்டாயென யார் சொல்லினும் நான் ஏற்கேன்.
ஒன்பது வருடங்களாக உன் சந்திப்பிற்காகக்
காத்திருக்கிறேன். இப்படியே காத்திருப்பேன்.
நான் இறக்கும் வரை காத்திருப்பேன்...
நீ எங்கேயோ வாழ்ந்து கொண்டிருக்கிறாய்.
என்னால் உன்னோடு தொடர்பு கொள்ள
முடியவில்லையென என் மனம் சொல்லும்
உன் இறப்பை மட்டும் நம்பமாட்டேன்!

என்றென்றும் அன்புடன்
**ஞானதாஸ்**

www.padippakam.com

## உயிர்தான் போனாலும் உருத்திரன் போகான்

உருத்திரன், உள்ளத்தை உருக வைக்கும் பவித்திரன்
மறந்திலன் அவன் நாமம் மண்ணிலே உள்ளவரை
சிறந்தவன் சீரான சேவைக்காய் பிறந்தவன்.
நிறைந்தவன் எம் நெஞ்சில் நிலையாக என்றென்றும்

சொல்லொணா சேவையில் சுடர்விட்ட ஜோதியாம்
அல்லையூர் விதானையார் அரும் பேற்றில் ஒரு பேறாம்
கல்லையும் கனிய வைக்கும உன் கனி பேச்சால், கட்டுண்ட
எமையெல்லாம் விட்டு விட்டு எங்கு நீ சென்றாயோ.

நீ பிறந்தாய் உன் கிராமம் பூரிப்புப் பெற்றது
நீ வளர்ந்தாய் அந்த மண் வளமாய் ஆனது
இந்துவில் உன் சேவை கனமாய் ஆனது – அதனால்
காலமெலாம் நண்பர்குழாம் உன் வசமானது.

கொஞ்சிடும் தமிழ்பேசி குவலயம் தனில் வாழ்ந்த
இந்துவின் மைந்தன் நீ இளையவர் தலைவன் நீ
நெஞ்சினில் வஞ்சம் இல்லை நிமிர்ந்திட்ட வீரநடை
வஞ்சகம் எதுவுமில்லா(து) வாழ்ந்திட்ட மறவன் நீ



படிப்பகம்

நண்பர்க்கு நண்பன் நீ நல்ல பண்பாளன் நீ
வம்பிற்கு வந்தோரை வைதிடும் வீரன் நீ
எண்ணியே காரியம் எடுத்தே முடித்திடும்
கண்ணியவாளன் நீ கருணையின் தோற்றம் நீ

அகதியாய் வந்தவரை அன்போடு அரவணைத்தாய்
ஆயிரம் உதவிகளை அள்ளி நீ சொரிந்து சென்றாய்
புதியதோர் அத்தியாயம் புனைந்திட நினைத்த வேளை
பதியினை விட்டுக் காலன் பறித்திட்ட சோகம் என்ன?

வெந்தணல் சுடு காட்டில் வேகும் உன் உடற்கட்டை
கண்களால் பார்க்கவா காத்திருந்தோம் கரிய வீரா
உந்தனை எண்ணி எண்ணி உள்ளம்தான் வேகுதே –
வந்து நீ ஒரு தடவை வாசலில் நிற்காயோ?

ஐயெட்டு வருடம் தாண்டி அது நான்காம் கூடும் வேளை
கை விட்டுப் போனாய் ஐயா கலங்குகிறோம் நாமே ஐயா
மெய் விட்டுப் போனாலும் எம் மனம் விட்டுப் போகாத
உருத்திரா உனை நினைத்து உறவுகள் வாழ்வோம் நாமே.

உரிமையுடன்,
**(தீவான்) நாரந்தனையூர் V. குமரன்**

www.padippakam.com

# எற்றைநாள் காண்போம் இனி

மண்ணின் உரிமைக்கும் மாத்தமிழர் வாழ்வுக்கும்
உண்ணின்று நாளும் உஞற்றினோன் - பண்ணார்ந்த
செந்தமிழ்சேர் நெஞ்சின் உருத்திரன் சென்றனனே
வெந்துயரில் எம்மையெலாம் விட்டு

உற்றுழி நட்டார்க் (கு) உதவிட முன்னிற்பான்
நற்றமிழ் இன்சொல் நலமுடையான் - மற்றவர்பால்
குற்றம் களைந்துகுணம் கொள்ளும் உருத்திரனை
எற்றைநாள் காண்போம் இனி.

- நா. மெய்யறி மகிழ்நன்

**என் மாமாவிற்கு.....**

பாசமான ஒரு உறவு பரிதவிக்க வைத்து பிரிந்து விட்டது
ரியம் கூறி தட்டிக் கொடுக்கும் என் மாமாவே!
தைரியம் இழந்து தவிக்கவிட்டு தனியாக ஏன் சென்றாய்?

பேசச் சொல்லிச் சொல்லி கேட்க ரசிக்க விரும்புவாய்
இப்போ பாட பாடலும் நினைவில்லை,
பேச நாவும் எழவில்லை
கேட்க எம்மோடு மாமா நீயும் இல்லை.

மாமா,
உன் இறுதி யாத்திரையில் இணையக்கூட
நான் கொடுத்து வைக்கவில்லையே,
சோகத்திலும் துயரத்திலும் துவண்ட வேளையிலும்
பாச உறவுகள் படையாக சூழ்ந்து நின்று பயணம்
அனுப்பியதைப் பார்த்து நான் விழிமல்கி விளித்து நின்றேன்

எங்குமாகி யாதுமாகி நிறைந்த பரம் பொருள் உன்னைத்
தன்னுடன் சேர்ந்து கொண்டதோ?

துயரோடு
**அருமை மருமகள் ஜெயதாரணி**



படிப்பகம்

# வேடிக்கை மனிதரைப் போல...

உயிரோடு உறவாடும்
அன்பு நண்பன் உருத்திரனுக்கு
அவசரமாக ஒரு கடிதம் உருத்திரா
உனக்குத் தெரியும் இங்கெல்லாம்
நாம் இப்போது கடிதம் எழுதுவதில்லை என்பது
எழுதுகிற கடிதம் போய்ச் சேர்வதற்கு இடையில்
பெறுகிறவன் போய்ச் சேர்ந்துவிடும் உன் தாய்
மண்ணில் கடிதங்களுக்கு அர்த்தம் இல்லைத்தான்,
ஆனாலும் அவசரமாக உனக்கு எழுதியே ஆக
வேண்டும் என்று படுகிறது.

உருத்தி உனக்கு ஒரு விடயம் ஆச்சரியமாக
இருக்கும், அண்மையில் நீ இறந்து விட்டதாக
எமது சில நண்பர்கள் என்னிடம் சொன்னார்கள்.
அதை நீ கேட்டிருக்க மாட்டாய்.
கேட்டிருந்தால் உனக்குச் சிரிப்பு வந்திருக்கும்.

எனக்கோ அதைக் கேட்டதும் சிரிப்புக்கு மேலாக
பெரும் கோபமாகவும் ஆத்திரமாகவும் இருந்தது.
இறத்தல் என்பது காலத்தால் அழிவது,
நீயோ காலம் கடந்து ஒரு காலம் ஆகியிருக்கலாம்.

நிச்சயமாக இறந்திருக்க மாட்டாய் என்பதை
எப்படி அவர்களுக்கு புரிய வைப்பது
என்பது தெரியவில்லை.


காலமாகாமல் வெற்று வெறுமனே
செத்துத் தொலைகிறவர்களுக்கு
இதை எப்படி புரிய வைப்பது என்பதை
நீ சொல்லித் தர மாட்டாயோ?
நீ பல கேள்விகளுக்கு பதில் தந்ததில்லை.
இதற்கும் தரமாட்டாய் என்று தெரிந்தாலும்
வேறு யாரிடம் நான் இதைக் கேட்பது?

திசைகாட்டிகள் இல்லாத எம் காலத்தில்
பலர் தொலைந்து போகிறார்கள்.
நீயோ பலருக்குத் திசைகாட்டியாகிக் காலமானவன்.
தோல்விகள் ஒருவனின் வாழ்வுக் காலத்திற்கு
முற்றுப் புள்ளி வைத்துவிடக் கூடாது என்பதில்
முனைப்போடு நின்ற உனக்கான காலத்தின்
களத்தை மாற்றிய முட்டாள்க் கடவுள் யாரென்று
முடிந்தால் எனக்கு அறிவி! நீ அறிவிக்கா விட்டாலும்
எனக்குத் தெரியும். எங்கிருந்தாலும் அந்தச் சூழலை
உனக்கானதாக ஆக்குவதில்
நீ கில்லாடி என்பதை நானறிவேன்.

எனக்கு எரிச்சலாக இருக்கிறது எல்லாவற்றையும்
உன்காலம் ஆக்கும் உன் திறனைப் பார்க்க. இப்ப
உனக்கு இன்னும் சுகம் சேர்ந்திருக்கும், உன்
மருமகளின் அன்புச் சிறைக்குள் மீண்டும்
இணைந்திருப்பாய். புதிய களத்தில் உன் புதிய
காலத்தின் தொடக்கத்தை குழப்பாமல் மௌனத்தால்
அன்பு சொல்லி விடை பெறுகின்றேன்.

– இளைய தம்பி **தயாநந்தன்**

www.padippakam.com



மகனுடன்...

# ABOUT MY DADDY

The King's dad gave him **20,000 ships** .
The Queen's dad gave her **10,000 ships.**
but my dad gave me only **1ship.**
the most important and lovable ship.....

Friendship by,

**T.U.SREE DEVI**
Loving Daughter.

மகளுடன்...





படிப்பகம்

# புலம்பெயர் நண்பனின் கண்ணீர் அஞ்சலி

"நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெட புழுதியில் எறிவதுண்டோ சொல்லடி சிவசக்தி"

பாரதியின் அந்த வார்த்தைகள், அதை உருத்திரன் சொல்லிய கம்பீரம் அன்று நடந்த அந்தக் கவிப்போரை இன்றும் என்னால் மறக்கமுடியாது. மக்கள் துன்பத்தை கவிதையாக எந்த தயாரிப்பும் இல்லாமல் சொல்ல முடியுமா என்று பரந்த வெளியில் அமர்ந்திருந்த எங்களிடம் முதன்மைப் பொறுப்பாளர் கேட்க நான் எழுந்து கவிதை சொல்லி அமர்கின்றேன், கரகோசம் ஓய்கிறது. வேறுயாரும் என்ற பாவனையில் அவர் பார்க்கின்றார். கறுத்த நிறம், அகண்ட புயம், மெலிந்த உடல் ஒருவர் எழுந்து கணீரென்ற குரலில் கவிதை கூறுகின்றார், வார்த்தைகள் நதிபோல் அசைந்து செல்கிறது. அமரும்போது என்னைப்பார்த்து ஒரு புன்முறுவல்............... அன்று தொடங்கியது எங்கள் நட்பு. அண்மையில் மரணப்படுக்கையில் கிடக்கும்போது நான் சென்று பார்த்தபோது கைகளைப் பற்றியவண்ணம் அதே புன்முறுவல். இவ்வளவு விரைவில் அந்தச் செய்தி வருமென்று நான் நினைக்கவில்லை.

"தனியொரு மனிதருக்கு உண்ண உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்"

உருத்திரன் செவிவழி பெற்றதை செயல்வடிவாக்கினான். அழிவிற்காகப் புறப்படவில்லை ஆக்கத்திற்காகத்தான் புறப்பட்டான். தன் இனம் படும் இன்னல் கண்டு துடித்த ஆயிரமாயிரம் பேரில் இவனும் ஒருவனாகினான். உன்னதமான சிந்தனை, உருப்போட்ட மனிதனாக நிமிர்ந்தபோது, சின்ன வயதில் பெரிய மனித தோரணை தொற்றிக்கொண்டது. கற்றலும் கற்பித்தலும் அவன் கைவந்த கலையானது.

"உலகம் முழுவதும் உழைக்கும் மக்களே ஒன்றுபடுவோம்" என்ற மாபெரும் தத்துவம் இவனை இறுகப்பற்றியது. அதனால் மக்களுக்காய் தன் பங்கை சென்ற இடத்தும் செலுத்தினான். பனியும் காற்றும் வெயிலும் மழையும் இவனை வதைக்கவில்லை; மயிலிறகின் வருடலைத்தான்தந்தது.
அங்குதான் அவன் வலது கையில் மறையாத வடுவும் ஏற்பட்டது, மயிரிழையில் உயிர் பிழைத்த வரலாறும் ஏற்பட்டது.

மீண்டுவந்தவன் தன் இனத்தின் விடிவிற்காய் தெருவில் நடந்தான். தோழமை இவனுக்கு தோள் தந்தது. நேர்மையின் பக்கமே எப்போதும் நிற்பது இவனுக்கு பழக்கமானது. விடுதலையின் பெயரால் தப்புக்கள் நடப்பதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கப் பிடிக்காதவனாய் இருந்தான். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதென்பார்கள் கற்றதும் கற்பித்ததும் காவுகொள்ளப்பட்டது. வேலியே பயிரை மேயத்தொடங்கியது. எதிர்த்திருந்தால் இவனைப் புதைத்த இடத்தில் புல் முளைத்திருக்கும், இவன் அடங்கிப்போனான், தன்னையே அடக்கிக் கொண்டான். தப்பென்று தெரிந்தும் தட்டிக் கேட்க

முடியாதவனாய் இருப்பதில் அர்த்தம் இருப்பதாய்த் தெரியவில்லை. அந்தப் பாதைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தான். உழைப்பால் உயர்ந்தான். பரந்த வெளியில் நின்ற ஆலமரமானான். போக்கிடமில்லாத பலருக்கு நிழலாக இருந்தான். இன்று புலம் பெயர் நாட்டில் பரந்து கிடக்கும் பலர் இவனால் முன்னேறினார்கள் என்றால் மிகையாகாது. நண்பர்களுக்கு நண்பனாக இருந்தான். சின்ன வயதில் பலதை சாதித்த பெருமையும் இவனுக்குண்டு. கிளைபரப்பி இலை விட்டு இளைப்பாறும் இடமாக இருந்த மரமொன்று இன்று சாய்ந்து கிடக்கிறது. சாவோலை வரவில்லை, தொலைபேசி அழைப்பொன்று இழவொலியாய் வந்தது. தோழனாய் தோளோடு தோள் நின்றவன், நண்பனாய் நெடுநாளாய் இருந்தவன், பொய் உடல் அகற்றி புகழுடம்பு பெற்றுவிட்டான்.

கடைசிவரை அருகிருந்து கவனித்துப் பார்த்த மனைவி புலம்பும் ஒலி என் காதில் ஒலிக்கிறது. அன்பு மகள் ஸ்ரீதேவி, செல்லமகன் சம்பத் கதறி அழும் காட்சி என் கண்ணில் தெரிகிறது. என் செய்வேன்?

உற்றம் அழ, சுற்றம் அழ, உறங்குகின்றான் எம் நண்பன். வார்த்தை இல்லை தேற்றுதற்கு. வணங்கி அமைகின்றேன்.

வீடு வரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரைப்பிள்ளை கடைசிவரை யாரோ?

**புலம் பெயர் நண்பன்**
**பாஸ்கரன்**
**அவுஸ்திரேலியா**

www.padippakam.com

# எண்ணிய கூறுவேன்

## நீ செய்தன கூறுவேன்

கரிய நிறத்து அரிமா ஒன்று
கருமுகில் போல கொடையுளம் கொண்டு
வருமிடர் தணித்து வாட்டம் நீக்கிய
வரலாறு உனது எடுத்துக் கூறுவேன்

உரிய நண்பர்க்கு உதவத் தலைப்பட்டு
உன்னை இடரினில் மாட்டிக் கொண்டனை
வருத்தம் சிறிதும் உளத்தில் காட்டா
வரலாறுண்டு எடுத்துக் கூறுவேன்

உளத்தில் வேலைப் பாய்ச்சுவோர் ஆயினும்
ஒறுத்து நீ அவரை விலக்கி வைக்காது
கருத்தினில் உயர்வைத் காட்டிய பண்பு
வரலாறு உனது எடுத்துக் கூறுவேன்

உடல் நலமற்று படுக்கையில் இருந்தும்
விடுதலை வேள்வியில் ஆற்றியோர் பணிகளை
எழுத்தினில் வடிக்கத் துடித்துக் கிடந்த
வரலாறு உனது எடுத்துக் கூறுவேன்

ஓடும் இயங்கியில் ஒலிக்கின்ற பாட்டை
இடையினில் நிறுத்திக் கேட்கப் பணித்து
தேடும் இலக்கிய வேட்கை கொண்ட
இயல்பு உன் வரலாறு எடுத்துக் கூறுவேன்



படிப்பகம்

திறமையைக் கண்டால் ஊக்கப்படுத்துவாய்
புதுமையைக் கண்டால் போற்றிக் கொள்ளுவாய்
உருத்திறம் பெற்ற ஆற்றல் கொண்ட
உருத்திரன் வரலாறை எடுத்துக் கூறுவேன்

"அழைத்துச் செல்க அருந்தவப் புதல்வனை
ஏதேனும் நேர்ந்தால் எமக்குக் காட்டுக!"
என்றுன் தந்தை பொதுவாழ்வுக்கனுப்பினார்
தொண்டுளம் உனது உரக்கக் கூறுவேன்

அற்ற குளத்து அறுநீரப் பறவையை
உவமை கூறியே ஒப்பிட்டுப் பார்த்து
உடல் குலுங்கி நீ உணர்வினைக் காட்டிய
வரலாறும் உண்டு எடுத்துக் காட்டுவேன்

அவ்வைக் கருங்கனி ஈந்த அதியனும்
உறும் பசி போக்கிய பெருஞ்சோற்று உதியனும்
அல்லைப் பிட்டியில் பிறப்பாய் எடுத்த
உருத்திர நண்பனைப் போற்றிப் பாடுவேன்.

- *அன்புநண்பன்*

www.padippakam.com

# அன்பு உருத்திரனண்ணா!

புலம் பெயர்ந்து வந்து எம்
இதயங்களில் குடிபுகுந்தாய்

நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து
எண்ணமெல்லாம் இணைந்து உள்ளங்கள்
மகிழ இல்லத்தில் ஒருவராய் நின்றோம்.

எம்மில் அணைத்திலும் உடன் இருந்த
நீ இப்படி அகாலத்தில் நிலம் பெயர்ந்தது ஏனோ!

நீ இல்லை எம் அருகில்
விம்மி வெடித்து துடிக்கின்றோம்.

இதயம் கசியும் ஈரத்தோடு
இதழ் உலர்ந்து நிற்கின்றோம்.

நட்பும் சுற்றமும் உனை நினைந்து ஏங்குதே
எம் எல்லோர் நெஞ்சிலும்
உன் நினைவுகள் மருகுதே.

எத்தனை நண்பர்கள் இருந்தென்ன
அத்தனை பேர் மத்தியிலும்
அரிதான முத்திரையாய் நீ!



படிப்பகம்

மண்ணக வாழ்வில்!
மனித நேயம் பேணியவனே
சொல்லழகும் இசை வேட்கையும்
கொண்ட கலா ரசிகனே!

நித்தமும் நினைப்போம் உன் சிறப்பை,
எவராலும் நிரப்ப முடியுமா உன் இடத்தை!

ஆண்டாண்டு கடந்தாலும் அழியாது உன் அன்பு
மாதங்கள் மறைந்தாலும் மறையாது உன் உறவு!

எங்கள் நெஞ்சம் நிறைந்திருக்க
எந்நாளும் வாழ்வாய்!

மீண்டும் இறை சந்நிதியில் நாம் சந்திக்கும் வரை
நிகரிலா உனை இழந்து தவிக்கும்

அன்புத் தம்பிகள்
**சகாய ராஜா - ஜெகதீஸ் சந்திரா**

www.padippakam.com

# அவர் ஓர் நிலையில் வருந்தினார்!

திருக்குறள் மணி – இறைக்குருவனார்

தமிழ்ஒளி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் மட்டுமே ஒளிபரப்பப்பட்டு வந்தாலும்
தமிழ்நாட்டில் –சென்னையில் அதற்கென
அலுவலகம் ஒன்று இயங்கிவந்தது.

அங்கு நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் பொறுப்பாளராகப்
பணியாற்றிவந்தவரான தென்மொழி அன்பர் ஆற்றலரசு அவர்கள்,
என் உரைகள் சிலவற்றைப் பதிவு செய்த தோடு,
தமிழ் ஒளியின் மேலாண்மை இயக்குநர்
திரு. உருத்திரக்குமரன் அவர்கள் என்னை அறிந்திருப்பதாகவும்
என் உரைகளைத் தொடர்ந்து ஒளிபரப்புதற்கு ஏற்பப் பதிவுசெய்யும்படி
கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதன்படி தமிழ்ஒளியில் காலை வணக்கம் என்னும்
புதுப் பகுதி தொடங்கப் பெற்றது; அதற்கும் பிறவற்றுக்குமாக
என் உரைகளும் பல்துறை சார்ந்த அறிஞர்கள் பலர்தம் உரைகளும்,
திருவள்ளுவர் தமிழ்வழிப் பள்ளி உள்ளிட்ட
தமிழ்வழிப் பள்ளிகளின் மாணவர்களுடைய கலை நிகழ்ச்சிகளும்
தொடர்ந்து பதிவுசெய்யப் பெற்றன.



படிப்பகம்

www.padippakam.com

உருத்திரன் தமிழீழத்தினின்றும் புலம் பெயர்ந்த தமிழர் என்றும்
போர்க்ககுணமும் பொதுநல உணர்வும் உடையவர் என்றும்
அறிந்திருந்தாலும் அவரை யான் நேரில் பார்த்ததில்லை.

பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனுமாகவே இருந்துவந்தோம்.
ஒருநாள் பதிவு அரங்கத்திற்கு யான் சென்ற போது அவராகவே வந்து
தம்மை அறிமுகம் செய்து கொண்டு என்பால் அன்பைப் பொழிந்தார்.
ஓரிருமுறை அலுவகத்தில் சந்தித்து உரையாடினேன்.
தமிழ்ஒளி கைமாறிய பின்னும் அவருடைய தொடர்பு விடுபட்டுவிட வில்லை.

ஒருமுறை உருத்திரனைச் சந்தித்த போது,
தமிழ்ப் பணி ஒன்றன் பொருட்டு இங்கிலாந்தில் –இலண்டனில் ஒரு
மாதத்திற்கு மேல் தங்கிவரும்படி அங்குள்ளார் ஒருவரிடமிருந்து அழைப்பு
வந்திருப்பது பற்றிக் கூறினேன். அவர் பெரிதும் மகிழ்ந்தார்
"இலண்டனில் உங்கள் பணி நிறைவெய்திய
பின்னர்த் தொடர்ந்து ஒரு மாதத்திற்கு மேலும்
நீங்கள் தங்க வேண்டியிருக்கும்; ஐரோப்பிய நாடுகள்
மேலும் சிலவற்றிற்குச் சென்றுவர நான் ஏற்பாடு செய்கிறேன்;
தமிழ்ஒளி வாயிலாக அங்குள்ள தமிழர்கள் உங்களை அறிந்திருப்பார்கள்;
செல்லும் நாள் குறித்துச் சொல்லுங்கள்" என்று கூறியிருந்தார்.

அத்திட்டம் நாட்கடத்தப்பட்டு பின்னர் ஒருவாறு கைவிடப்பட்டது.
இனிமேல் அது செயல்படுவதாக இருந்தாலும்
சொன்னபடி செய்ய நம் உருத்திரன் இங்கே இல்லை!

உருத்திரனின் பிள்ளைகள் இருவரும் உள்ளகரத்தில் அவருடைய
இல்லத்திற்கு அருகில் உள்ள பள்ளியிலேயே பயின்று வந்தனர்.
ஆயினும் தமிழில் தேர்ச்சி பெற்றால் மட்டும் போதாது;
திறமும் உரமும் பெறவேண்டும் என்று விழைந்து அவர்கள் என்

துணைவியார் இறை பொற்கொடியிடம் தனிப்பயிற்சி பெற ஆவன செய்தார். திருவள்ளுவர் மழலையர் பள்ளி அப்போது திருவான்மியூரில் இயங்கி வந்தமையால் எங்கள் குடியிருப்பும் அங்கேயே இருந்தது. பிள்ளைகள் நாள்தோறும் பள்ளிக்கூடம் விட்டு வீடுவந்தபின் மீண்டும் வந்து பயின்று செல்வது சிக்கலாய் இருந்தது. தொடக்கக் கல்விதானே பயிலுகிறார்கள்; வீட்டருகிலேயே தமிழாசிரியர் வேறு யாரையேனும் அமர்த்திக் கொள்ளலாமே என்று யாங்கள் கூறிய போதும் அவர் இசையவில்லை.

"என் பிள்ளைகள் பாவலரேறு குடும்பத்தவரிடந்தான் தமிழ் கற்க வேண்டும்" என்று விடப்பிடியாகக் கூறி, நாள் தோறும் மகிழ்ந்து அனுப்புவதாகவும் தம் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வேண்டவே என் துணைவியாரால் தவிர்க்க இயலவில்லை. ஆயினும் மகிழுந்து வேண்டாம் என்றும் தானியிலேயே வந்து செல்வதாகவும் கூறி அப்பணியை மேற்கொண்டார். திருவள்ளளுவர் மழலையர் தொடக்கப் பள்ளியும் எமது குடியிருப்பும் மேடவாக்கத்திற்கு மாறிய பின்னும், அப்பணி இன்னும் தொடர்கிறது.

உருத்திரன் நோய்வாய்ப்பட்டிருந்த போது இல்லத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கும் பொற்கொடி அம்மையைக் காண நேர்ந்தால் "என் பிள்ளைகளுக்கு அவர்கள் மேற்படிப்பெல்லாம் படித்து முடிக்கும் வரை நீங்கள் தாம் தமிழ் கற்பிக்க வேண்டும். பாடத்தோடு நல்ல பழக்கவழக்கங்களையும் சொல்லிக் கொடுங்கள். நல்ல பண்பாடுகளை கற்றுக்கொடுங்கள்" என்று அவர் மீண்டும் மீண்டும் கூறியதை என் துணைவியார் இப்போதும் நினைவு கூர்கிறார்.

உருத்திரனைக் கண்டு உடல்நலம் உசாவிவரச் சென்ற நான் அடுத்து ஓரிரு கிழமைகளில் இலங்கை நுவரலியா செல்ல இருப்பது பற்றியும் இயலுமாயின் அப்படியே தமிழீழத்திற்கும் சென்று வர எண்ணியிருப்பதாகவும் தெரிவித்தேன்.

நோயால் நலிவுற்றிருந்த நிலையிலும் அவர் மட்டற்ற மனக்கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் அடைந்தார். "கட்டாயம் தமிழீழத்திற்குச் சென்று வாருங்கள்; நீங்கள் அங்கே போய்விட்டால் போதும்; ஏற்றிப் போற்றுவார்கள், இனிது புரப்பார்கள்; போய் வாருங்கள்!" என்று கூறி வழியனுப்பினார். அவர் வாய்மொழி வீண்போகவில்லை. என் வாணாளில் அஃது ஓர் அரிய நிகழ்ச்சி! கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன்னர்க்கொழும்பில் இறங்கி நுவரலியாவையடைந்து. அங்கே திருக்குறள் நெறித் திருமணம் ஒன்றைச் சிறப்புற நடத்தி வைத்துவிட்டு, அடுத்த நாளே சில சிக்கல்களையுங் கடந்து தமிழீழத்துக்குச் சென்ற நான் அங்கே சிறப்பான வரவேற்பைப் பெற்றேன்;

உருத்திரனின் பெருமிதமான தோற்றமும் அருந்தமிழ் ஆர்வமும், இனநலவுணர்வும், உதவும் உள்ளமும், உறுதியான செயற்பாடுகளும் என்றென்றும் மறக்க முடியாதவை. அவர் எம் நினைவில் வாழ்கிறார்!

www.padippakam.com

ஈகை உள்ளத்து இமயமே!
ஏடெழுதா இலக்கியவாதியே!
எங்கள் உருத்திரனே!
காலம் பிரித்தாலும் - இந்த
ஞாலம் உன்னை மறவாது.



படிப்பகம்

www.padippakam.com

உறவை, நட்பை, தோழமையை
உயர்வாய் மதித்தவனே!
வாழ்வில் ஒவ்வொரு துளியையும்
உண்மையாய் ரசித்தவனே!
நெருப்புச் சுவை காணவோ - நீயு
நீங்காத் துயில் கொண்டாய்?



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

தென்னை போல்
உயர்ந்த மனமும்
அன்னை போல்
உயர்ந்த குணமும்
கொண்டவனே!

மரணத்தின் வலைவீச்சில்
மாய்ந்து விட்டதோ
உன் பெருமூச்சு!

குடும்ப உறவுகளில்
சுவை மிஞ்சும் கனியாக
இனித்தவன் நீ!

நட்பு உள்ளங்களில்
பனி சிந்தும் மலராக
சிலிர்த்தவன் நீ!

நிழல் கொடுக்கும் மரம்
வெயிலில் நிற்பது போல்
பலருடைய வாழ்க்கைக்கு
நிழல் தர
வெயிலில் நின்றவன் நீ!

எங்கள் நினைவுப் பேரேடுகளில்
நீங்காமல் நிலைபெற்றுவிட்டாய்.



படிப்பகம்